உ

சிவமயம்



யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை, ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

# திருமதி கந்தசாமி கனகாம்பிகை

அவர்களின் சிவப்பேறு குறித்த

# நினைவஞ்சலி மலர்

29.06.2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையகத்துள் வாழ்வாங்கு வாழ்வர் – வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.



மண்ணில்
12.05.1944

விண்ணில்
29.05.2006

# அமரர் கந்தசாமி கனகாம்பிகை

## திதி வெண்பா

விளங்கும் விய வருடமதில் வைகாசித்திங்கள் பதினைந்தில்
துயர்போக்கும் வளர்பிறை துதியைதனில்
பார்புகழ வந்துதித்த கனகாம்பிகை
சத்தியின் தாழ் சேர்ந்தார் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை, ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி கந்தசாமி கனகாம்பிகை


அவர்களின் சிவப்பேறு குறித்த

# நினைவாஞ்சலி மலர்

29.06.2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



மானிட வாழ்வின்

மாண்பினை மதித்தே

மாதருள் மாணிக்கமாய்ச் சிறந்தே

மாபெரும் வம்ச ஊற்றாய்

மாறிடும் வாழ்வில்

மாநிலம் போற்ற

மாறாத அன்பின் ஊற்றாய்

மாயச் சோதியில், கலந்தே மறைந்த

மாசறு தலைவிக்கே சமர்ப்பணமே.



இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பிரார்த்தனைப் பாடல்கள்



## விநாயகர் காப்பு

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தினிளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கரவின் மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்

# பஞ்சபுராணம்

## தேவாரம்

மங்கையர்க் கரசி வளவர் கோன்பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணி செய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவா யாவதும் இதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியை எண்ணினல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைக ணில்லேன்
கழலடியே கைதொழுது காணி னல்லால்
ஒண்ணுளே யொன்பது வாசல் வைத்தா
யொக்க வடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணிய வுன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த வெம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறை யுறைசிவனே
யாரொடு நோகேனார்க் கெடுத்துரைக்கே
னாண்டநீ யருளிலையானால்
வார்கடலுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரியாயே.

சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாய்
ஒருவனே சொல்லுதற் கரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்த மாகடலே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாது நீ போவதோ வகை யெனக் கருளாய்
வந்து நின் இணையடி தந்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

பவளமால் வரையைப் பனிபடர்ந் தனையதோர்
படரொலித் திருநீறும்
குவளை மாமலர்க் கண்ணியும் கொன்றையும்
துன்று பொற்குழல் திருச்சடையும்
துவள மாளிகை சூழ்திரு தில்லையுள்
திருநடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறும் என்மனம்
தழல் மெழு கொக்கின்றதே.

மூலமாய் முடிவாய் முடிவிலாய் முதலாய்
முகத்தலை யகத்தமர்ந் தினிய
பாலுமா யமுதாம் பன்னகா பரணன்
பணி மலர்ந் திருவடி யிணைமேல்
ஆலயம் பாகின னைய சொற் கருவூர்
அமுதுறழ் தீந்தமிழ் மாலை
சீலமாப் பாடு மடியவ ரெல்லாஞ்
சிவபதம் குறுகி நின்றாரே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற உழறி உமை மண வாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
வளப்பெரும் கரணங்கள் நான்கும்
சிந்தையேயாகக் குண மொரு மூன்றுஞ்
திருந்து சாத்து விகமேயாக
இந்துவாழ் சடையானாடு மனாந்த வெல்லையில்
தனிப் பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துட் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் திளைத்தார்.

## திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக் கொரு வித்துக் குருபர எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் தருவருள்
முப்பத்துமு வர்க்கத் தமரரு மடிபேணப்
பத்துத் தலை தத்தக கணை தொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியி லிரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப் புயல் மெச்சத் தகு பொருள்
பட்சத்தொடு ரட்ஷித் தருள்வது மொரு நாளே
தித்தித் தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப் பதம் வைத்துப் பயிரவி
திக்கொக்கந டிக்கக் கழுகொடு கழுதாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்குப்பரி அட்டப் பயிரவர்

தொக்குத் தொகு தொக்குத் தொகு தொகு

சித்ரப் பவிரிக்குத் திரிகடக எனவோதக்

கொத்துப் பறை கொட்டக் களமிசை

குக்குக்குகு குக்குக் குகுகுகு

குத்துப்புதை புக்குப் பிடியென முதுகூகை

கொட்புற்றொழ நட்பற் றவுணரை

வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி

குத்துப்பட வொத்துப் பொரபல பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்

கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க

நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க

மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைரவர் துதி

தளம் பொலி மலரோனாதி வானவர் தாழ்ந்து போற்ற
வுளம் பொலி காசி மேவு முயிர்கள் செய்பாவமெலாங்
களம் பொலியாது தண்டங் கண்டற வொழிந்து முத்தி
வளம் பொலி வகை செய் கால வைரவற் கன்பு செயவாம்.

பரமனை மதித்திடாப் பங்கையாசனன்
னொருதலை கிள்ளியே ஒழிந்தவானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

## பட்டினத்தார் பாடல்

விட்டுவிடப் போகுதுயிர் விட்டவுனே உடலைச்
சுட்டுவிடப் போகின்றான் சுற்றத்தார் - பட்டதுபட்
டென் நேரமும் சிவனை யேற்றுங்கள் போற்றுங்கள்
சொன்னேன் அதுவே சுகம்.

## திருப்போரூர் சந்நிதி முறை

நோயுற் றடராமல் நொந்துமனம் வாடாமல்
பாயில் கிடவாமல் பாவியேன் - காயத்தை
ஓர் நொடிக்குள் நீக்கியெனை ஒண் போரூர் ஐயாநின்
சீரடிக்கீழ் வைப்பாய் தெரிந்து.

கன்றழைக்கு முன்னே கருதிவரும் ஆப்போல்
நின்றழைக்கும் நாயேற்கு நேர்தோன்றி ஒன்றினுக்கும்
அஞ்சாதே வாவென்(று) அழைப்பாய் தென் போரூரா
எஞ்சாதே பேரருளால் இன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுப் பாதையிலே.........!

ஈழவள நாட்டில் யாழ்ப்பாணத்தில் சங்கிலிமன்னன் ஆண்ட காலத்திலே வளம்பல கொண்ட பகுதிகளில் ஆனைமடுவம் என்றழைக்கப்பட்டு பிற்காலத்தில் ஆனைக்கோட்டை என மருவிய வரலாற்றுச் சிறப்புமிக்க நன்னிலத்தில் ஆறுகால்மடம் என்னும் பகுதியில் மயிலு வீதியின் கண்ணே சிறந்த சிவபக்தராம் ஐயாத்துரை செல்லம் தம்பதிகள் சிறப்புற்று வாழும் நாளில், பிள்ளை இல்லாக் குறை பெரிதும் இவர்களை வாட்டியது. குலதெய்வமான அம்மனை நாள்தோறும் கும்பிட்டதன் பலனாக தவப்புதல்வியாக கனகாம்பிகையும், குணமணியாய் குலராணியும், குலக்கொழுந்தாய் மன்மதராசாவும், தேவியாம் ரதிதேவியென மக்கட் செல்வங்களைப் பெற்று நிறைவுடனே வாழ்வாங்கு வாழ்ந்தனர். குடும்பத்தில் மூத்த பெண்ணதனால் கனகாம்பிகை அன்பு, பொறுமை, பண்பு எனப் பேணி மற்றவர் மெச்சும்படி வாழ்ந்தார். கனகாம்பிகை என்ற பெயர் கனகம் என்றே அன்புடன் அழைக்கும் நிலை ஏற்பட்டது. அழகு, கல்வி என சகலதும் ஒருங்கே பெற்ற மகளை திருமண பந்தத்தில் இணைக்கவென இருந்த வேளையில்

அளவெட்டிப்பதி தன்னில் அலுக்கைப் பகுதியில் வாழ்ந்து வந்த உத்தமனார் சரவணமுத்து சின்னம்மா தம்பதிகளுக்கு செல்வத்துள் செல்வம் மக்கட் செல்வம் என நாச்சிப்பிள்ளை, நாகேஸ்வரி, மனோன்மணி, கந்தசாமி, செல்லமுத்து, தியாகு, பூபதி, ராணி, மகேந்திரன், இரத்தினம் என புதல்வி, புதல்வரைப் பெற்று பெருவாழ்வு வாழ்ந்தனர். திருமண வாழ்வில் பிள்ளைகள் இணைந்துவிட தர்மசீலராம் கந்தசாமிக்கும் இறையருளாளள் கனகாம்பிகைக்கும் திருமணம் முடித்து இல்லற வாழ்வில் இணைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழி வகுத்தனர் பெற்றோர். இவர்களது இனிய இல்லறத்தில் பயனாக, வசந்தகுமாரி, வசீகரன், சிறீதரன், சேகரன், வளர்மதி, கமலாம்பிகை,க கருணாகரன், தயாபரன், சசீகரன் எனப் பிள்ளை களைப் பெற்று வளமாக வாழ்வு வாழும் நாளில் பிள்ளைகளின் தக்கவயதறிந்து பருவத்தே பயிர் செய்வது போல திருமண பந்தத்தில் இணைத்திட வசந்தகுமாரிக்கு ஆனந்தராசாவையும், வசீகரனுக்கு கோமளாவையும், சிறீதரனுக்கு சுபாசினியையும், சேகரனுக்கு சிவப்பிரியாவையும், வளர்மதியை கருணாசலத்திற்கும், கமலாம் பிகைக்கு சுதாகரனையும், கருணாகரனுக்கு ஜெயசிதாவையும், தயாபரனுக்கு சுபலதாவையும் திருமணம் செய்து அவரவர் வாழ்க்கை தனிவழி தொடர வழி வகுத்தனர். அவரவர் வழியே போனாலும் பேரக்குழந்தைகள் பெரும் பேறாய்க்கருதி பெருமையுடன் வாழும் நாளில் இடம் பெயர்வு காரணமாக இந்தியா சென்று மகளுடன் சிலகாலம் வசித்துவிட்டு தன் மண்ணில் வாழ்ந்து இறப்பது மேல் எனக் கருதி தன்வீட்டில் வசிக்கும் நாளில் வைர வரையும், அம்மனையும் குல வழிபாடாய் வழிபட்டு மன மகிழ்வுடன் இருந்து வந்தார். வாழ்வு போதுமென்று காலனவன் கணக்கெடுத் தான். திடீரென ஏற்பட்ட நோயின் காரணமாக சிலநாட்கள் சிரமப் பட்டார். அகவை 62ல் 29.05.2006 அன்று திங்கட்கிழமை வளர்பிறை துதியை திதியில் இரவு 9 மணி 25 நிமிடமதில் உறக்கமதில் மீளா உறக்கம் அடைந்தாரே!

அன்னாரது வாழ்வு நிறைவுடை வாழ்வு என்றும் அன்னாரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனிமரமானேன்.....!

பூவோடும், பொட்டோடும் போய்ச் சேர – நினைத்தென்னை
தனிமரமாய் தவிக்கவிட்டாய்!
பலகாலம் வாழ்வென்று பகற் கனவு கண்டேனே!
பார்த்து பரிதவிக்க பாவியை விட்டெங்கு – சென்றாய்!
வள்ளுவனும், வாசுகியும் வாழ்ந்த வாழ்வு நல்வாழ்வு
வாழ்ந்த வாழ்வெல்லாம் கனவாகிப் போனதெங்கே?
மீண்டும் நீ வருவாய் என விழிமூடாதிருக்கின்றேன்.

**(கணவன்)**

## அலைகடல் துரும்பானோம்........!

மின்னாமல் முழங்காமல் முடிவொன்றும் தெரியாமல்
எங்கு சென்றாயம்மா?..... ஏனிந்த அவசரமோ?
நித்திரையாய் இருப்பீர்களென்று நிம்மதியாய் நாமிருந்தோம்!
இடியேறு கேட்ட நாகம் போல் ஏங்கியே நிற்கின்றோம்
போனவழி தெரியவில்லை போக்கிடமும் எமக்கில்லை
அன்னையாயில்லாமல் ஆசனாய் மந்திரியாய்
எமையெல்லாம் அன்பாலே வழி நடாத்தி
வையகத்து வாழ்வாங்கு வாழ  வழி செய்தாய்!
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் – தாயே!
உன் உறவு தாரணியில் மிகப் பெரிது
தாயில்லாக் குஞ்சுகள் போல் ஏங்கித் தவிக்கின்றோம்
தேறுதலைத் தந்தெம்மை தேற்றி விட வாராயோ!

**(பிள்ளைகள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீரில் கரைகின்றோம்.....!

அன்பான மாமியும்மை அன்னையாய் நினைத்தோமே!
மருமக்கள் என்றெம்மை வேற்றுமை கொண்டதில்லை!
உங்கள் அன்புக்கு ஈடில்லை, இணையில்லை
எமதன்பில் குறை கண்டோ சொல்லாமல் சென்றீர்கள்?
இன்று இருளாகிப் போனது இல்லமும், இதயங்களும்
வெந்து மாள்கின்றோம் வெந்துயர் தீர்ப்பவர் யார்?
அள்ளி அணைத்தவுயிர் அரனடி சென்றாலும்
நித்தம் சாந்தி பெற நிமலனை வேண்டுகின்றோம்!

(மருமக்கள்)

## எங்கு சென்றாய் எமை விட்டு?

அம்மம்மா, அப்பம்மா என ஆசையாய் அன்பொழுக
– நாமிருந்தோம்!
அன்புடனே பல கதைகள் ஆர்வமுடன் கூறுவீர்கள்!
வண்ண நிலாக்காட்டி நல்லமுதூட்டுவீர்கள்!
இன்று ஏனிந்த மௌனம்?
நித்திரையாயிருந்தீர்களென நிறைவுடனே நாமிருந்தோம்!
காலையில் நாம் கண்விழித்தால் எல்லோர் முகங்களிலும் ஏனிந்த
– கண்ணீர்.

(பேரப்பிள்ளைகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வாராயோ.......!

ஒரு கொடியில் பிறந்தாலும் உன்னன்புக் கீடில்லை
வெங்கோபங் கொண்டதில்லை! வெறுப்புற்று பேசியதில்லை!
எந்நாளும் உன்முகம் எம்முன்னே நிற்கையிலே
ஒரு வார்த்தை கூறாது ஏனிந்த உறக்கமம்மா!
உற்றவரும் மற்றவரும் ஏங்கித் தவிக்கையிலே
மீளாவுறக்கம் விட்டு மீண்டும் வரமாட்டாயோ!

**சகோதர, சகோதரிகள்,**
**மைத்துனன், மைத்துனி,**
**உறவினர்கள்.**

# அறிவோம் பலதும்

**வாழ்வில் சொர்க்கம் (6)**

தினசரி வருமானம்,
நோயில்லாதவுடல்,
அன்பான மனைவி
பிரியமான வார்த்தை பேசும் உறவினர்
தனக்கடங்கிய குழந்தைகள்
பொருள்வர வழிவகுக்கும் கல்வி

இவை மனிதனுக்கு இருந்தால் வாழ்வு சொர்க்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சபூதங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | அப்பு | – | வேலூர் |
| 2. | தேப்பு | – | திருவண்ணாமலை |
| 3. | வாயு | – | காளகஸ்தி |
| 4. | ஆகாயம் | – | விரிஞ்சிபுரம் |
| 5. | ப்ருத்வி | – | காஞ்சிபுரம் |

## உடலில் நவக்கிரகங்கள்

சூரிய மண்டலத்தின் பிரதிப் பிம்பமே மனிதன் மனிதனின் உடற் கூற்றுக்கள் நவக்கிரகங்களினால் ஆக்கிரமிப்பு செய்யப் பட்டுள்ளன.

சூரியன் சிரசிலும்,
புதன் நுரையீரல்களிலும்,
சுக்கிரன் இருதயத்திலும்,
பூமி வயிற்றிலும்,
சந்திரன் கல்லீரலிலும்,
செவ்வாய் கைகளிலும்,
குரு ஆண் உறுப்புகளிலும்,
சனி கால்களிலும்
நித்யாவஸ்தை செய்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரி காப்பு

## விநாயகர் துதி

திருச்சிச்சிற்றம்பலம்



முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொ ருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வராமற்கா.

### வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மா தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக்குயிராக
என்றும் இருந்தே எனைக் காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளிதாயே
கொடிய மகிஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோபதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா உமையவளைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நூண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடன் தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி வாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்து வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் பெருகிவரும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்து வரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்துகாட்டுமடி
சொல்லற்கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வு முண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றி யமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அபிராமிப்பட்டர் அருளிய

# அபிராமி அந்தாதி



## காப்பு

தாரமர் கொன்றையும் சண்பகமாலையும் சாத்தும் தில்லை
ஊரர்தம் பாகத்து உமைமைந்தனே உலகேழும் பெற்ற
சீர்பிராமி அந்தாதி எப்போதும் என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதியே நிற்கக் கட்டுரையே.

## நூல்

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்குமத் தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே!

துணையும் தொழுந்தெய்வமும் பெற்றதாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையுமென் பாசாங்குசமும் கையில்
அணையும் திரிபுர சுந்தரி அறிந்தனயே

அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்து கொண்டு
செறிந்தேன் உனது திருவடிக்கே திருவே வெருவிப்
பிறிந்தேன் நின் அன்பர் பெருமை எண்ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழும் நரகுக்கு உறவாய மனிதரையே.

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என் புந்தி எந்நாளும் பொருந்துகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும்புணர் முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை அம்புயமேல
திருந்திய சுந்தரி அந்தரி பாதம் என் சென்னியதே.

சென்னியது உன் பொன் திருவடித்தாமரை சிந்தையுள்ளே
மன்னியது உன்திருமந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின் அடியாருடன் கூடி முறைமுறையே
பன்னியது என்றும் உன்றன் பரமாகம பத்ததியே.

ததியுறு மத்திற் சுழலும் என் ஆவிதளர் விலதோர்
கதியுறு வண்ணம் கருது கண்டாய் கமலாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும்மாலும் வணங்கியென்றும
துதியுறு சேவடியாய் சித்துரானை சுந்தரியே.

சுந்தரி எந்தை துணைவி என் பாசத்தொடரை யெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
சுந்தரி கைத்தலத்தாள் மலர்ந்தாள் என் கருத்தனவே.

கருத்தன எந்தைதன் கண்ணன் வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பால் அழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச் சிலையும் அம்பும்
முருத்தன மூரலும் நீயும் அம்மே வந்தென் முன் நிற்கவே.

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவது உன்மலர்த்தாள் எழுதாமறையின்
ஒன்றும் அரும்பொருளே அருளே உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே அழியா முத்தி ஆனந்தமே

அபிராமி அந்தாதி முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரியம்மன் தாலாட்டு

## விநாயகர் துதி

### காப்பு

### கொச்சகக் கலிப்பா

பூதலத்தில் யாவர்க்கும் பேராதரவா யென்னாளும்
மாதரசி யென்று வாழ்த்துகின்ற மாரியம்மன்
சீதரனார் தங்கை சிறப்பான தாலாட்டைக்
காதாலுட னோதக் கணபதியுங் காப்பாமே.

### வெண்செந்துறை

முந்திமுந்தி விநாயகரே முக்கணனார் தன்மகனே
கந்தருக்கு முன்பிறந்த கற்பகமேமுன்னடவாய்
வேலவர்க்கு முன்பிறந்த விநாயகரே முன்னடவாய்
வேம்படியிற் பிள்ளையாரே விக்கினரேமுன்னடவாய்
பேழைவயிற்றோனே பெருச்சாலிவாகனரே
காரணமால்மருகா கற்பகமே மெய்ப்பொருளே
சீரான நல்மருகா செல்வக் கணபதியே
ஒற்றைக் கொம்போனே யுமையாள் திருமகனே
கற்றைச் சடையணிந்த கங்கா தரன்மகனே
வித்தைக்கு விநாயகனே வெண்ணையுண்டோன் மருகா
மத்தக்கரிமுகவா மாயோன்மருகோனே
ஐந்துகரத்தோனே யானை முகத்தோனே
தந்திமதவாரணனே தற்பரனேமுன்னடவாய்
நெஞ்சிற் குடியிருந்து நீயெனக்குமுன்னடவாய்
பஞ்சஞ்சுமெல்லடியாள் பார்வதியாள் புத்திரனே
வேழ முகத்தோனே விநாயகரேமுன்னடவாய்
தாழ்விலாச்சங்கரனார் சற்புத்திராவாருமையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னடக்கும் பிள்ளையார்க்கு கண்ணடக்கம் பொன்னாலே
கண்ணடக்கம் பொன்னாலே காற்சிலம்புமுத்தாலே
முத்தாலே தண்டைகொஞ்ச முன்னடவாய் பிள்ளையாரே
செல்வக் கணபதியுன் சீர்பா தம்நான் மறவேன்.

## சரஸ்வதி துதி

தாயேசரஸ்வதியே சங்கரியேமுன்னடவாய்
என் தாயே கலைவாணி யேகவல்லிநாயகியே
வாணிசரஸ்வதி வாக்கில்குடியிருந்து
என்னாவிற்குடியிருந்து நல்லோசைதாருமம்மா
கமலாசனத்தாலே காரடிபெற்றவளே
என் – குரலிற்குடியிருந்து கொஞ்சடிபெற்றவளே
என்னாவுதவறாமல் நல்லோசை தாருமம்மா
மாரியம்மன் தன்கதையை மனமகிழ்ந்துநான் பாட
சரியாக என்னாவில் தங்கி குடியிருமம்மா
கன்னனூர் மாரிமுத்தே கைதொழுது நான்பாட
பின்னமில்லாமல் பிறகிருந்துகாருமம்மா
மாயிமகமாயி மணிமந்திரசேகரியே
ஆயிவுமையானவளே ஆதிசிவன் தேவியரே
மாரித்தாய்வல்லவியே மகராசிவாருமம்மா
மாயன்சகோதரியே மாரிமுத்தே வாருமம்மா
ஆயன்சகோதரியே ஆஸ்தானமாரிமுத்தே
தாயேதுரந்தரியே சங்கரியே வாருமம்மா
திக்கெல்லாம்போற்று மெக்காலதேவியரே
எக்காலதேவியரே திக்கெல்லாம் நின்ற சக்தி
கன்னபுரத்தாளே காரணசவுந்தரியே
காரணசவுந்தரியே நாரணனார் தங்கையம்மாள்
நாரணனார் தங்கையம்மாள் நல்லமுத்துமாரியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லமுத்துமாரியரே நாககன்னி தாயாரே
உன் – கரகம்பிறந்ததம்மா கன்னனூர் மேடையிலே
உன் – வேம்பு பிறந்ததம்மா விஜயநகர் பட்டணமாம்
உன் – சூலம் பிறந்ததம்மா துலங்குமணி மண்டபத்தில்
உன் – அலகு பிறந்ததம்மா அயோத்தி நகர்பட்டணமாம்
உன் – பிரம்பு பிறந்ததம்மா பிச்சாண்டி சந்நிதியாம்
உன் – உடுக்கை பிறந்ததம்மா உத்திராட்ச பூமியிலே
உன் – பம்பை பிறந்ததம்மா பளிங்குமாமண்டபத்தில்
உன் – கருத்து பிறந்ததம்மா கஞ்சகிரியிந்திரபுரம்
உன் – மருளர் தழைக்கவம்மா வையங்களீடேற
உன் – குமரரவர்க்கந்தான்றழைக்க கொம்பனையே மாரிமுத்தே
உனக்கு – மூன்று கரகமம்மா முத்தான நற்கரகம்
உனக்கு – ஐந்து கரகமம்மா அசைந்தாடும் பொற் கரகம்
உனக்கு – ஏழு கரகமம்மா எடுத்தாடும் பொற்கரகம்
உனக்கு – பத்து கரகமம்மா பதிந்தாடும் பொற்கரகம்
வேப்பிலையும் பொற்கரகம் வீதி விளையாடிவர
ஆயிரங்கண்ணுடையாள் அலங்காரிவாருமம்மா
பதினாயிரங் கண்ணுடையாள் பராசக்திவாருமம்மா
துலுக்காணத்தெல்லையெல்லாம் குலுக்காடப் பொன்பிறந்தாய்
துலுக்காணத் தெல்லைவிட்டு துரந்தரியே வாருமம்மா
தாயே துரந்தரியே சங்கரியே வாருமம்மா
மலையாளதேசமெல்லாம் விளையாடப் பெண் பிறந்தாய்
மலையாள தேசம் விட்டு வாருமம்மாயிருந்தமுகம்
சமைந்தாய்சமயபுரம் சாதித்தாய் கன்னபுரம்
இருந்தாய் விலாடபுரம் இனியிருந்தாய் தாய் கன்னபுரம்
சமயபுரத்தாளே சாம்பிராணி வாசகியே
சமயபுரத்தெல்லைவிட்டுத் தாயாரே வாருமம்மா
கன்னபுரத்தாளே காரணசவுந்தரியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னபுரத்தெல்லைவிட்டு காரணியே வந்தமரும்
கடும்பாடியெல்லையெல்லாம் காவல்கொண்ட மாரிமுத்தே
கடும்பாடியெல்லைவிட்டுக் கட்டழகிவாருமம்மா
ஊத்துக்கட்டமர்ந்தவளே உதிரபலிகொண்டவளே
ஊத்துக் காட்டைவிட்டு உத்தமியே வாருமம்மா
படவேட்டமர்ந்தவளே பரசுராமனைப் பெற்றவளே
படவேட்டைவிட்டுமெள்ள பத்தினியே வாருமம்மா
பெரியபாளையத்தமர்ந்த பேச்சியெனும்மாரியே
பெரியபாளையத்தைவிட்டு பேரரசி வாருமம்மா
ஆரணி பெரியபாளையமாம் அதிலிருக்கும்மாற்றங்கரை
ஆற்றங்கரைமேடைவிட்டு ஆச்சியரே வாருமம்மா
வீராம்பட்டணமமர்ந்த வேதாந்தமாரிமுத்தே
கோலியனூரெல்லையிலே குடிகொண்ட மாரியரே
அந்தரத்திற்றேரோட அருகே செடிலசைய
உச்சியிற்றேரோட உயரச்செடிலசைய
மச்சியிற்றேரோட மகரச்செடிலசைய
பக்கங்கயிரோட பகரச்செடிலசைய
ஆண்டகுருதேசிகரை அறியாதமானிடரை
தூண்டிலிட்டாட்டி வைக்கத் தோன்றினாய் நீயொருத்தி
சத்தியாய் நீயமர்ந்தாய் தனிக்குட்டி காவுகொண்டாய்
எல்லையிலே நீயமர்ந்தாய் எருமைக்கிடாய் காவுகொண்டாய்
உன்னைப்போல் தெய்வம் உலகத்தில் கண்டதில்லை
என்னைப் போல் பிள்ளைகள் தா னெங்குண்டு வையகத்தில்
கோர்த்தமுத்துவடமசைய கொங்கைரெண்டும்பாலொழுக
ஏற்றவர்க்குவரந்தருவாய் எக்காலதேவியரே
எக்காலதேவியரே திக்கெல்லாமாண்டவளே
திக்கெல்லாமாண்டவளே திகம்பரியேவாருமம்மா
முக்கோணசக்கரத்தில் முதன்மையாய் நின்ற சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கோணந் தன்னில் வந்து ஆச்சியரே வந்தமரும்
தாயே துரந்தரியே சங்கரியே வாருமம்மா
மாயிமருளியரே மணிமந்திரசேகரியே
வல்லாண்மைக்காரியரே வழக்காடும் மாரிமுத்தே
வல்லவரைக்கொன்றாய் வலியவரை மார்பிளந்தாய்
நீலிகபாலியம்மா நிறைந்த திருச்சூலியரே
நாலுமூலையோமகுண்டம் நடுவேகனகசபை
கனகசபை வீற்றிருக்கும் காரணசவுந்தரியே
காரணசவுந்தரியே நாரணனார் தங்கையரே
நாரணனார் தங்கையரே நல்லமுத்துமாரியரே
நடலைச்சுடலையம்மா நடுச்சுடலைதில்லைவனம்
தில்லைவனத்தெல்லைவிட்டு திரும்புமம்மாயிருந்தமுகம்
வார்ப்புச்சிலையாளே வச்சிரமணித்தோரளே
தூண்டித்துடைபெருமன் தூண்டிமுள்ளுகைபெருமன்
மண்டையிலேதைத்தமுள்ளு மார்புருகிபோகுதம்மா
பக்கத்திற்றைத்தமுள்ளு பதைத்துத்துடிக்குதம்மா
தொண்டையிலேதைத்தமுள்ளு தோளுருவிப் போகுதம்மா
கத்திபோல்வேப்பிலையே கதறவிட்டாய் லோகமெல்லாம்
ஈட்டிபோல் வேப்பிலையை யினியனுப்பியக் கொண்டவளே
பத்திரிக்குள்ளிருக்கும் பாவனையையாரறிவார்
வேப்பிலைக்குள்ளிருக்கும் வித்தைகளையாரறிவார்
செடிலோதுடைபெருமான் தூண்டிமுள்ளுகைபெருமன்
தூண்டிமுள்ளைத்தூக்கி துடுக்கடக்கும் மாரிமுத்தே
ஒற்றைச்செடிலாட ஊரனைத்தும் பொங்கலிட
இரட்டைச் செடிலாட யிரண்டணியம் பொங்கலிட
பக்கச்செடிலாட படைமன்னர்கொக்கரிக்க
பரமசிவன் வாசலிலே பாற்பசுவுகாவுகொண்டாய்
ஏமனிடவாசலிலே எருமைகிடாகாவுகொண்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எருமை கிடாகாவு கொண்டாய் எக்காலதேவியரே
எக்காலதேவியரே திக்கெல்லாமாண்டசக்தி
காசிவள நாட்டாளே கன்னியாகுமரியரே
காசிவள நாட்டைவிட்டு கட்டழகி வாருமம்மா
ஊசிவள நாடு உத்தியாகுமரிதேசம்
அறியாதான் பாடுகிறேன் அம்மைத் திருக்கதையை
தெரியாதான்பாடுகிறேன் தேவித்திருக்கதையை
எட்டென்றாலிரண்டறியேன் ஏழையம்மாவுன்னடிமை
பத்தென்றாலொன்றறியேன் பாலனம்மாவுன்னடிமை
பாடவகையறியேன் பாட்டின் பயனறியேன்
வருத்தவகையறியேன் வர்ணிக்கப் பேரறியேன்
பேருமறியேனம்மா பெற்றவளேயென் தாயே
குழந்தைவருந்துறது உன்கோவிலுக்குக் கேட்கிலையோ
மைந்தன்வருந்துறது உன்மாளிகைக்குக் கேட்கிலையோ
பாலன்வருந்துறது பார்வதியே கேட்கிலையோ
கோயிற்கடிமையம்மா கொண்டாடும் பாலகண்டி
மாளிகையை விட்டு மாதாவும் வாருமம்மா
சந்நிதியைவிட்டு தாயாரும் வாருமம்மா
அரண் மனையைவிட்டு ஆத்தாளே வாருமம்மா
கோயிற்கடிமையம்மா கொண்டாடும் பாலகண்டி
சந்நிதிமைந்தனம்மா சங்கரியேபெற்றவளே
வருந்தியழைக்கின்றேன்நான் வண்ணமுகங்காணாமல்
தேடியழைக்கிறேன் நான் தேவிமுகங்காணாமல்
ஏழைக்குழந்தையம்மா எடுத்தோர்க்குப் பாலகண்டி
பாலன் குழந்தையம்மா பார்த்தோர்க்குப் பாலகண்டி
மைந்தன்குழந்தையம்மா மகராசிகாருமம்மா
கல்லோடியுன்மனது கரையலையோ எள்ளளவும்
இரும்போடியுன் மனது இரங்கலையோ எள்ளளவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லும் கரைந்திடுமுன் மனங்கரையாதென்னவிதம்
இரும்புமுருகிடுமுன் இதயமுருகா தென்னவிதம்
முன்செய்த தீவினையோ முற்காலத்துப்பயனோ
பெரியோர்கள் செய்த தீவினையோ பெற்றவளே சொல்லுமம்மா
ஏதுமறியேனம்மா ஈஸ்வரியே சொல்லுமம்மா
கடும்பாடி எல்லையிலே கட்டழகி வீற்றிருப்பாய்
கடும்பாடி யெல்லைவிட்டு கட்டழகி வாருமம்மா
கரசுத்தழகியரே கட்டழகி மாரிமுத்தே
கரகத்துமீதிருந்து கட்டழகி கொஞ்சுதம்மா
கும்பத்தழகியம்மா கோபாலன் தங்கையரே
கும்பத்துமீதிருந்து கொஞ்சுமம்மா பெற்றவளே
கொஞ்சுமம்மா பெற்றவளே குறைகளொன்றும் வாராமல்
உனக்கு – பட்டுப்பளபளவென பாடகக்கால் சேராட
உனக்கு – முத்துமொளமொளென்ன மோதிரங்கால் சேராட
உலகமெல்லாமுத்தெடுக்க உள்ளபடிதான் வந்தாய்
தேசமெல்லாம் முத்தெடுப்பாள் தேவி கன்னனூராளே
முத்தெடுத்துத் தான்புகுந்தாய் உத்தமியே மாரிமுத்தே
உனக்கு – ஈச்சங்குறக்கூடை யிருக்கட்டும் பொன்னாலே
உனக்கு – தாழங்குறக்கூடை தனிக்கட்டும் பொன்னாலே
குறக்கூடைமுத்தெடுத்து கொம்பனையே நீ புகுந்தாய்
கோயிலின் சந்தடியில் கூப்பிட்டால் கேளாதோ
அரண்மனைச் சந்தடியில் அழைத்தாலும் கேளாதோ
மாளிகையின் சந்தடியில் மாதாவே கேட்கிலையோ
மக்களிடசந்தடியோ மருமக்கள் சந்தடியோ
பிள்ளைகளின் சந்தடியோ பேரன்மார்சந்தடியோ
அனந்தம்பெருமையோ ஆசாரச் சந்தடியோ
சந்தடியை நீக்கியம்மா தாயாருமிங்கேவா
கொல்லிமலையாண்டவனைக் குமரகுருபரனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தவராயனைத்தான் கட்டழகிதானழையும்
தொட்டியத்துச் சின்னானை துரைமகனைத் தானழையும்
மதுரைவீரப்பனையென் மாதாவேதானழையும்
பாவாடைராயனைத்தான் பத்தினியே தானழையும்
கருப்பண்ணசுவாமியையும் கட்டழகி தானழையும்
சங்கிலி கருப்பனைத்தான் சடுதியிற்றானழையும்
முத்தாலுராவுத்தன் முனையுள்ளசேவகரை
வெட்டிக்கலித்துவரும் வேதாந்தமாரிமுத்தே
பெரியபாளையத்தமர்ந்த பேச்சியரே மாதாவே
பாளையக்காரியம்மா பழகாரிமாரிமுத்தே
கன்னனூர்மாரிமுத்தே கலகலென நடனமிடும்
உன்னைப்பணிந்தவர்க்கு உற்றதுணை நீயிரம்மா
ஆதிபரமேஸ்வரியே அருகே துணை நீயிரம்மா
உன்னைப் போல் தெய்வத்தை உலகத்தில் கண்டதில்லை
என்னைப் போல் மைந்த ரெங்குமுண்டு வையகத்தில்
உன் – மகிமையறிந்தவர்கள் மண்டலத்தில் யாருமில்லை
உன் – சேதியறிவாரோ தேசத்துமானிடர்கள்
உன் – மகிமையையானறிந்து மண்டபத்தில் பாடவந்தேன்
உன் – மகிமையறியாதுலகில் மாண்டமனுகோடியுண்டு
உன் – சேதியறியாதுலகில் செத்தமனுகோடியுண்டு
தப்புப்பிழைவந்தாலும் சங்கரியே நீ பொறுத்து
ஆறுதப்பு நூறுபிழை அடியார்கள் செய்ததெல்லாம்
மனது பொறுத்து மனமகிழ்ச்சியாகவேணும்
தேன்மனம் பொறுத்து தீர்க்கமுடன்ரட்சியம்மா
கொண்டுமனம் பொறுத்து கொம்பனையே காருமம்மா
கார்க்கடனுனக்கு காரணசவுந்தரியே
காரடிபெற்றவளே காலுதலை நோகாமல்
வேணுமென்று காரடிநீ வேப்பஞ்சிலையாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்துணையிருந்து பாலகனைக்காருமம்மா
பொரிபோலெழும்பிநீ பூரித்து ஆலித்து
ஆலித்து நீயெழும்பி ஆத்தாளிறக்குமம்மா
சிரசினிற்முத்தையம்மா தற்காத்து நீயிறக்கும்
முகத்தினில் முத்தையம்மா முன்னுதாய் நீயிறக்கும்
கழுத்தினில் முத்தையம்மா கட்டழகி நீயிறக்கும்
தோளினில் முத்தையம்மா துரந்தரியே நீயிறக்கும்
மார்பினில் முத்தையம்மா மாதாவே நீயிறக்கும்
வயிற்றினில் முத்தையம்மா வடிவழகி நீயிறக்கும்
துடையினில் முத்தையம்மா தேவியே நீயிறக்கும்
முழங்காலில் முத்தையம்மா மீனாட்சி நீயிறக்கும்
கணுக்காலில் முத்தையம்மா காமாட்சி நீயிறக்கும்
பாதத்தில் முத்தையம்மா பாரினிலிறக்கிவிடும்
பூமியிலறக்கிவிடும் பெற்றவளே காருமம்மா
பெற்றவளே தாயே பேரரசிமாரிமுத்தே
உற்றதுணை நீயிருந்து உகந்தரியே காருமம்மா
உன்னை விடபூமி தன்னில் உற்றதுணை வேறுமுண்டோ
பக்கத்துணையிருந்து பாதுகாத்துரட்சியம்மா
செக்கச்சிவந்தவளே செங்கண்ணன் தங்கையரே
மங்கையெனும் மாதரசி மகராசிகாருமம்மா
திங்கள் வதனியரே தேவி கன்னனுாராளே
எங்கள் குலதேவியரே ஈஸ்வரியே கண்பாரும்
மங்கள விநோதி மாதாவோ கண்பாரும்
ஏழைக்கிரங்காமல் இப்படியே நீயிருந்தால்
வாழ்வதுதானெக்காலம் வார்ப்புச்சிலையாளே
ஆயிமகமாயி ஆரணங்கு சொற்காரணியே
மாயிமகமாயி மணிமந்திரசேகரியே
இரங்கிரங்குந்தாயாரே யெங்களைக் காப்பாற்றுமம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரித்தாய் வல்லவியே மகராசிகாருமம்மா
வீரணன்சோலையிலே ஆரணம் தானசக்தி
நீதிமன்னர்வாசலிலே நேராய்க் கொலுவிருந்தாய்
கொலுவிருந்த சக்தியரே கோர்த்தமுத்து நீயிருக்கும்
கோர்த்தமுத்துநீயிறக்கும் கொம்பனையே மாரிமுத்தே
போட்டமுத்து நீயிறக்கும் பொய்யாதவாசகியே
பொய்யாதவாசகியே புண்ணியவதி ஈஸ்வரியே
செடிலோதுடைபெருமன் தூண்டிமுள்ளுகைபெருமன்
அடங்காதமானிடரை ஆட்டி வைக்கும் மாரிமுத்தே
துஷ்டர்கள் தென்டனிட்டு துடுக்கடக்கும் மாரிமுத்தே
கண்டவர்கள் தென்டனிட்டு கலக்கமிடும் மாரிமுத்தே
அண்டாத பேர்களைத்தான் ஆணவத்தைத்தானடக்கி
இராஜாக்களெல்லோரும் நலமாகத் தான் பணிய
மகுடமுடி மன்னர் மனோன்மணியைத் தான் பணிய
கிரீடமுடிதரித்த கீர்த்தியுள்ளராஜாக்கள்
மகுடமுடி மந்திரிகள் மன்னித்து தென்டனிட்டு நிற்க
பட்டத்துரைகள் படைமுகத்துராஜாக்கள்
வெட்டிக்கெலித்துவரும் வேதாந்த வேதியர்கள்
துஷ்டர்களைத் தானடக்கும் சூலிகபாலியம்மா
அடங்காதமானிடரை யடிமைபலிகொண்டசக்தி
மிஞ்சிவரும்ராட்சதரை வெட்டிவிருதுண்டகண்ணே
தஞ்சமென்றமானிடரை தற்காக்கும்பராபரியே
அவரவர்கள் தான் பணிய வாக்கினையைப் பெற்றவளே
சிவனுடன் வாதாடும் சித்தாந்தமாரிமுத்தே
அரனுடன் வாதாடும் ஆஸ்தான மாரிமுத்தே
பிரமனுடன் வாதாடும் பெற்றவளே மாரிமுத்தே
விஷ்ணுவுடன் வாதாடும் வேதாந்த மாரிமுத்தே
எமனுடன் வாதாடும் எக்கால தேவியரே
தேவருடன் வாதாடும் தேவிகன்னனூராளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னபுரத்தாளே காரணசவுந்தரியே
காரணசவுந்தரியே கர்த்தனிடதேவியரே
நெருப்பம்மா உன்சொரூபம் நிஷ்டூரக் காரியரே
அனலம்மா உன்சொரூபம் ஆஸ்தான மாரிமுத்தே
தனலம்மா உன்சொரூபம் தரிக்கமுடி போகாது
அண்டாநெருப்பேயம்மா ஆதிபரமேஸ்வரியே
காத்தாளைப் பெற்றவளே கட்டழகி மாரிமுத்தே
தொட்டியத்துச் சின்னானை தொழுதுவர பண்ணசக்தி
கருப்பனையுங் சவடவே தான் கண்டுபணியவைத்தாய்
பெண்ண ரசிக்காகப் பிள்ளையைக் கழுவில் வைத்தாய்
ஆணழகிக்காக மைந்தனைக்கழுவில் வைத்தாய்
அடங்காதபிள்ளையென ஆண்டவனைக்கழுவில் வைத்தாய்
துஷ்டனென்று சொல்லி துடுக்கடக்கிக்கழுவில்வைத்தாய்
பாரினில் முத்தையம்மா பத்தினியே தாயாரே
வாரியெடுக்கவொரு வஞ்சியரையுண்டு பண்ணாய்
முத்தெடுக்குந் தாதி மோகனப் பொண்ணேயென்று
தாதியரைத்தானழைத்து தாயாரேமுத்தெடுப்பாய்
முத்தெடுக்குத்தான் புகுந்தாய் உத்தமியாள் மாரிமுத்தே
மாயிமகமாயி மணிமந்திர சேகரியே
ஆயிவுமையவளே ஆதிசிவன் தேவியரே
ஆதிசிவன் தேவியரே ஆஸ்தான மாரிமுத்தே
பாரமுத்தைநீயிறக்கிப் பாலகனைகாருமம்மா
காரடிபெற்றவளே காலுதலைநோகாமல்
சொற்கேளாப்பிள்ளையென்று தூண்டிக்கழுவில்வைத்தாய்
கழுதனக்குமோர்வார்க்க கட்டழகியுண்டு பண்ணாய்
நல்லதங்காளையுண்டு பண்ணாய் நற்கழுவுக்கு மோர்வார்க்க
உரியில் தயிர்வார்க்க உத்தமியையுண்டு பண்ணாய்
உன்மருமகளைக் காத்தாப்போ லிவ்வடிமையைக்காருமம்மா
எவ்வளவு நேரமம்மா ஏறெடுத்துப் பாருமம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுகளவு நேரமம்மா கண்பார்க்க வேணுமம்மா
கண்பார்க்க வேணுமம்மா கடல்துயின்றோன் தங்கையரே
கடைக்கண்ணால் நீ பார்த்தால் கடைத்தேறிபோவேனம்மா
பாரளந்தோன் தங்கையரே பாலகனைக் காருமம்மா
பேரரசிமாரிமுத்தே பிள்ளைகளுக்காருமம்மா
மகமாயிமாரிமுத்தே மைந்தர்களைக்காருமம்மா
பெற்றவளே மாரிமுத்தே பிள்ளைகளைக் காருமம்மா
ஆணழகி மாரிமுத்தே அடிமைகளைக் காருமம்மா
பூணாரம் பூண்டவளே பிள்ளைகளைக்காருமம்மா
பாரமெடுக்கவம்மா பாலனாலாகுமோதான்
பூணாரந்தானெடுக்க பிள்ளையாலாகுமோ தான்
பிள்ளையைக் காருமம்மா பெற்றவளே என் தாயே
வருத்தப்படுத்தாதே மாதாவே கண்பாரும்
கண்பாரும் கண்பாரும் கனகவல்லித் தாயாரே
பாலன்படுந்துயரம் பாக்கியவதி பார்க்கிலையோ
மைந்தன்படுந்துயரம் மாதாவே பார்க்கிலையோ
குழந்தைபடுந்துயரம் கொம்பனையே பார்க்கிலையோ
சிற்றடிகள் படுந்துயரம் தேவியரே பார்க்கிலையோ
பூணாரமுத்திரையை பெற்றவளே தானிறக்கும்
ஆபரணமுத்திரையை ஆத்தாளிறக்குமம்மா
இறக்கிறக்குந் தாயாரே எங்களைக் காப்பாற்றுமம்மா
அடிமைதனைக் காப்பாற்றி ஆணழகி நீயிறக்கும்
கும்பத்துமாரியம்மா கொலுவிலலங்காரியரே
கொலுவிலலங்காரியரே கோர்த்தமுத்து நீயிறக்கும்
கோர்த்துமுத்து நீயிறக்கும் கொம்பனையே மாரிமுத்தே
மாரியென்றால் மழைபொழியும் தேவியென்றால் தேன்சொரியும்
தேவியென்றால் தேன்சொரியும் திரிபுரசுந்தரியே
திரிபுரசுந்தரியே தேசத்துமாரியம்மா
பொன்னுமுத்துமாரியரே பூரணசவுந்தரியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயாரே பெற்றவளே சத்தகன்னிசுந்தரியே
பேருமறியேனம்மா பெற்றவளே தாயாரே
குருடன்கைக்கோலென்று கொம்பனையோ நீயறிவாய்
கோலைப்பிடுங்கிக் கொண்டால் குருடன் பிழைப்பானோ
இப்புடிக்கு நீயிருந்தால் இனிபிழையோம் தாயாரே
கலிபிறக்குமுன்பிறந்த உத்தண்டமாரிமுத்தே
கலியுகத்தில் தாயே கண்கண்ட தெய்வம் நீ
உன்னைப்போல் தெய்வம் உலகத்தில் கண்டதில்லை
என்னைப்போல் மைந்தர்தா னெங்குண்டு வையகத்தில்
அனலைமிதியாய்நீ யாவரையுஞ் சட்டைபண்ணாய்
புனலைமதியாய்நீ பூலோகஞ்சட்டைபண்ணாய்
வருந்தியழைக்கிறேனுன் வண்ணமுகம் காணாமல்
தேடியழைக்கிறேனுன் திருமுகத்தைக் காணாமல்
பாலகனைக் காத்து பாதத்தாலுதைத்துவிடு
மைந்தனைக் காத்து மகராசிவுதைத்துவிடு
குழந்தையைக் காத்து கொம்பனையேவுதைத்துவிடு
ஆதிபரஞ்சோதி அங்குகண்ணே வாருமம்மா
வெள்ளிக்கிழமையிலே கொள்ளிக்கண் மாரியரே
வெள்ளியிலுந்திங்களிலும் வேண்டியபேர் பூசைசெய்ய
பூசைமுகத்திற்கு போனேனென்று சொல்லாதே
இந்தமனையிடத்தி லீஸ்வரியே வந்தருள்வாய்
வந்தமனைவாழுமம்மா யிருந்தமனை ஈடேறும்
இருந்தமனையீடேற ஈஸ்வரியே வந்தருள்வாய்
கண்பாரும் கண்பாடும் கனகவல்லித்தாயாரே
நண்பான பிள்ளைகளை நலிந்திடச்செய்யாதே
உன்னை நம்பினோரை ஓய்ந்துவிடச் செய்யாதே
அந்நீதஞ் செய்யாதே ஆயிமகமாயி
வேம்புரதமேறி வித்தகியே வாருமம்மா
பச்சிலைரதமேறி பார்வதியே வாருமம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வதியே காருமம்மா பரந்தாமன் தங்கையரே
கொலுவிலிருந்த சக்தி கோர்த்தமுத்து நீயிறக்கும்
போட்டமுத்தை நீயிறக்கும் பூலோக மாரிமுத்தே
கேளிக்கையாக் கிளிமொழியே முத்திறக்கும்
அரும்பாலகன்றன்னை அவஸ்தைப்படுத்தாதே
வருத்தப்படுத்தாதே மாதாவே கண்பாரும்
அன்னமிறங்கவம்மா ஆத்தாளே கண்பாரும்
ஊட்டத்தைநீகொடுத்து உத்தமியேகாருமம்மா
இரக்கம்கொடுத்துநீ ஈஸ்வரியே காருமம்மா
காருமம்மா பெற்றவளே காலுதலை நோகாமல்
எங்கேயோபாராமுகமா யிருந்தேனென்று சொல்லாதே
அந்திசந்தி பூஜையிலே அசதியாயெண்ணாதே
ஒட்டாரம் பண்ணாதே ஓங்காரி மாரிமுத்தே
பாவாடம் நேருமம்மா பழிகள் வந்து சேருமம்மா
பாவாடம் நேர்ந்ததென்றால் பாலருக்கேறாது
கண்டார் நகைப்பார்கள் கலியுகத்தாரே சுவார்கள்
கலியுகத்தாரே சுவார்கள் கட்டழகி மாரிமுத்தே
பார்த்தார் நகைப்பார்கள் பரியாசம் பண்ணுவார்கள்
உதடுபடைத்தவர்கள் உதாசினஞ் சொல்லுவார்கள்
பல்லைப்படைத்தவர்கள் பரியாசம் பண்ணுவார்கள்
நாவைப்படைத்தவர்கள் நாணயங்கள் பேசுவார்கள்
பார்த்தோர் நகைக்கவம்மா பரியாசம் பண்ணாதே
பரியாசம் பண்ணாதே பரமசிவன் தேவியரே
கச்சிப்பதியாளே காமாட்சி தாயாரே
தாயாரே பெற்றவளே தயவு வைத்துக் காருமம்மா
மாதாவே பெற்றவளே மனம் பொறுத்துக்காருமம்மா
பார்வதியே பெற்றவளே பக்ஷம் வைத்துக் காருமம்மா
ஆயிரங்கண்ணுடைய அலங்காரி வாருமம்மா
பதினாயிரங் கண்ணுடைய பராசக்தி வாருமம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினாயிரமுத்தினிலே பார்த்தெடுத்த வாணிமுத்து
நூறாயிரமுத்தினிலே நூற்றெடுத்த வாணிமுத்து
ஆறாயிரங்கண்முத்துதனி லாத்தாள் வளர்ந்தெழுந்தாள்
நாகத்தின் கண்ணேயம்மா நல்லவிடப்பாம்பே
சேஷத்தின் கண்ணேயம்மா சின்னவிடப்பாம்பே
அஞ்சுதலை நாகமுனைக் கொஞ்சிவிளையாடுதம்மா
பத்துதலை நாகமம்மா பதிந்து விளையாடுதம்மா
செந்தலை நாகமம்மா சேர்ந்து விளையாடுதம்மா
கருந்தலை நாகமம்மா தாக்குதம்மா உன் கொலுவில்
சேஷனென்ற பாம்பையெல்லாம் சேரவே பூண்டசக்தி
நாகமென்ற பாம்பையெல்லாம் நலமாகப் பூண்டசக்தி
அரவமென்ற பாம்பையெல்லாம் அழகாகப்பூண்ட சக்தி
ஆபரணமாய்பூண்டாய் அழகுள்ளபாம்பையெல்லாம்
நாகங்குடைபிடிக்க நல்லபாம்பு தாலாட்ட
பூணாரமாய் பூண்டாய் பொன்னு திருமேனியெல்லாம்
தாலாட்டதலாட்ட தாயார் மனமிறங்க
சேஷன்குடைகவியச் செந்நாகம் வட்டமிட
வட்டமிட்டு வீற்றிருந்தாய் மாரிகன்னனூராளே
மார்மேலே நாகம்மா மடியேற்புரண்டாட
தோள்மேல் நாகம்மா துடைமேற்புரண்டாட
மார்மேலுந்தோள் மேலும் வண்ணமடிமேலும்
கொஞ்சிவிளையாடுதம்மா கோபாலன் தங்கையரே
ஏழையாலாகுமோ தான் ஈஸ்வரியைத் தோத்தரிக்க
குழந்தையாலாகுமோதான் கொம்பனையை தோத்தரிக்க
அடியேனாலாகுமோதான் ஆத்தாளைத் தோத்தரிக்க
எந்தனாலாகுமோதான் ஈஸ்வரியைத் தோத்தரிக்க
இல்லையென்பார்பங்கில் ஈஸ்வரியே மாரிமுத்தே
நில்லாயரை நாழி நீஷடுரத்தாண்டவியே
உண்டென்பார்பங்கில் ஒளிவிளக்காய் நின்ற சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தோருக்குச் செல்வனம்மா பாலன்குழந்தையம்மா
உன்னைப்பகைத்தோர்க்கு உருமார்பிலாணியம்மா
நினைத்தோர்க்கு தெய்வமம்மா எதிர்த்தோர்க்குமார்பிலாணி
தாயே நீவாருமம்மா தற்பறையாய நின்ற சக்தி
வாக்கிட்டால் தப்பாது வரங்கொடுத்தால் பொய்யாது
பொய்யாது பொய்யாது பூமலர்தான் பொய்யாது
பூவிரண்டு பூத்தாலும் நாவிரண்டு பூக்காது
மறவரிடவாசலிலே மல்லிகைப்பூ பூத்தாலும்
மறவரறிவாரோ மல்லிகைப் பூவாசனையை
குறவரிடவாசலிலே குடமல்லி பூத்தாலும்
குறவரறிவாரோ குடமல்லிவாசனையை
பன்றிமுதுகினில் பன்னீரைப் பூசினாக்கால்
பன்றியறியுமோதான் பன்னீரின் வாசனையை
எந்தனாலாகுமோ தான் ஈஸ்வரியைத் தோத்தரிக்க
மைந்தனாலாகுமோ தான் மாதாவைத் தோத்தரிக்க
பிள்ளையாலாகுமோதான் பெற்றவளைத் தோத்தரிக்க
பாலகனாலாகுமோதான் பார்வதியை தோத்தரிக்க
எச்சிலொருகோடி இளம்தீட்டு முக்கோடி
தீட்டுமொருகோடி தெருவெங்குந் தானுமுண்டு
கன்னிகள் தீட்டு கலந்தோடி வந்தாலும்
ஆறுதப்புநூறு பிழை அடியார்கள் செய்தாலும்
தாயே மனம் பொறுத்து தயவாகக்காருமம்மா
எச்சிற்கலந்ததென்று இடையப்போய் நின்றாலும்
தீட்டுக்கலந்தாலும் ஈஸ்வரியேமனம் பொறுத்து
பக்ஷம்வைத்துக்காருமம்மா பராபரியேயீஸ்வரியே
விருப்பம்வைத்துக் காருமம்மா விருதுபடைத்தசக்தி
நீலிகபாலியம்மா நிறைந்த பஞ்சாட்சரியே
சூலிகபாலியம்மா சுந்தரியே மாரிமுத்தே
நிஷ்டூரக்காரியரே விஸ்தாரமுள்ள சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேப்பிலையாள் தான் தடவி விசிறிமுத்தமுத்திவிடு
ஆதிபராசக்தியரே யம்மைமுத்தமுத்திவிடு
இறங்கிறங்குந்தாயே ஈஸ்வரியே நான் பிழைக்க
படவேட்டமர்ந்தவளே பழிகாரி மாரிமுத்தே
ஊத்துக் காட்டமர்ந்தவளே உதிரிபலிகொண்டவளே
வீராணம்பட்டணமமர்ந்த வேதாந்த மாரிமுத்தே
சமைந்தாய் சமயபுரம் சாதித்தாய் கண்ணபுரம்
கண்ணபுரத்தெல்லையெல்லாம் காவல்கொண்ட மாரியரே
கண்ணபுரத்தெல்லைவிட்டு காரணியே வாருமம்மா
எக்காலதேவியரே ஈஸ்வரியே யிறங்குமம்மா
திக்கெல்லாம் பேர்படைத்த தேசத்து மாரியரே
அண்டபுவனமெல்லாம் துண்டரீகமுள்ளசக்தி
கச்சிப்பதியாளே காமாட்சித் தாயாரே
கைலாசலோகமெல்லாம் காவல்கட்டியாண்டவளே
பாதாளலோகமெல்லாம் பரதவிக்க பண்ணசக்தி
காலைக்கொலுவிலம்மா காத்திருந்தா ராயிரம்பேர்
உச்சிக்கொலுவிலம்மா உகந்திருந்தா ராயிரம்பேர்
அந்திக் கொலுவிலம்மா அமர்ந்திருந்தா ராயிரம் பேர்
கட்டியக்காரரெல்லாம் கலந்தெச்சரிக்கைபண்ண
பாடும்புலவரெல்லாம் பண்பிசைந்த பாடல் சொல்ல
வடுகர்துலுக்கரோடு மராட்டியர்கன்னடியர்
கன்னடியர்காவலுடன் கர்நாட்டுப்பட்டாணியர்
இட்டசட்டைவாங்காத இடும்பரெல்லாம் காத்திருக்க
போட்டசட்டை வாங்காத பொந்திலியர் காத்திருக்க
வடுகர்துலுக்கரம்மா மறுதேசப்பட்டாணியர்
வேடிக்கைபார்த்திருந்தாள் வேப்பஞ்சிலையாளும்
கேளிக்கை பார்த்திருந்தாள் கிளிமொழியாள் மாரிமுத்து
மாயமெல்லாமுன்மாயம் மருளரெல்லாமுன்மருளர்
மருளர்தழைக்கவம்மா மருமக்களீடேற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலிச்சட்டிதானெடுக்கும் புத்திரர்கள் தான்றழைக்க
வேதங்கள் தான்றழைக்க விண்ணவர்களீடேற
குமாரவர்க்கந் தான்றழைக்க கொம்பனையே காண்பாரும்
மைந்தர்கள் தான்றழைக்க மாதாவே கண்பாரும்
காஞ்சிபுரியிலேதான் கர்த்தரையும்நீ நினைந்து
கர்த்தரையும் நீ நினைந்து காமாட்சி பூஜை பண்ணாய்
கங்கைமுழுகியம்மா வனமயிலே தவமிருந்தாய்
பொய்கைமுழுகியம்மா பெற்றவளே தவமிருந்தாய்
தவத்தில் மிகுந்தவளே சத்தகன்னி தாயாரே
ஆற்றுமணலெடுத்து அரனாரையுண்டு பண்ணாய்
சேற்றுமணலெடுத்து சிவனாரை யுண்டு பண்ணாய்
கம்பைநதியிலே காமாட்சி தவமிருந்தாய்
இருநூற்றுக்காதவழி திருநீற்றால் கோட்டையிட்டாய்
திருநீற்றால் கோட்டையிட்டாய் திகம்பரியே மாரிமுத்தே
அருணாசலந்தனிலே ஈசான்யமூலையிலே
திருவண்ணாமலையிலே தான் தேவிதவமிருந்தாய்
அருணாசலந்தனிலே ஆத்தாள் தவமிருந்தாய்
ஈசான்யமூலையிலே இருந்தாய் பெருந்தபசு
இருந்தாய்பெருந்தபசு இடப்பாகம் பேருபெற்றாய்
இடப்பாகம் பேருபெற்றாய் ஈஸ்வரியே மாதாவே
காகமுதுகினில் கதம்பப் பொடி பூசிவைத்தால்
காகமறியுமோதான் கதம்பப்பொடி வாசனையை
கொக்குமுதுகினிற் கோமேதகங்கட்டி வைத்தால்
கொக்குமறியுமோதான் கோமேதகத்தினொளியை
மூலக்கனலின் முதன்மையாய் நின்றசக்தி
பாலனுக்குவந்த பராஎரிச்சல்களில்
காலெரிவுகையெரிவு கட்டழுகி வாங்குமம்மா
குத்தல்குடைச்சல் குலைமாரிடிநோவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டைக்குடைச்சலோடு மாரடைப்புதலை நோவு
வாதபித்தசீதசுரம் வல்பிணியைக் காருமம்மா
இடுப்புக்குடைச்சலைத்தான் ஈஸ்வரியே வாங்குமம்மா
பித்தயெரிவுகளை பெற்றவளே வாங்குமம்மா
கழுத்து வலியதனைக் கட்டழகி வாங்குமம்மா
பத்திரியால் தான்தடவி பாரமுத்தமுத்திவிடு
விபூதியை போட்டு இறக்கிவிடு முத்திரையை
வேப்பிலைப் பட்டவிடம் வினைகள் பதந்தோடுமம்மா
பத்திரிபட்டவிடம் பாவம் பறந்தோடுமம்மா
விபூதிபட்டதஷணமே வினைகள் பறந்தோடுமம்மா
பஞ்சாஷரம்பட்டால் பாவங்கள் தீர்ந்துவிடும்
பத்தென்றாலிரண்டறியேன் பாலனம்மாவுன்னடிமை
எட்டென்றாலிரண்டறியேன் ஏழையம்மாவுன்னடிமை
நாகத்தின் கண்ணேயம்மா நல்லவிடைப் பாம்பே
சேஷத்தின் கண்ணேயம்மா சின்னவிடைப் பாம்பே
பாம்பேதலைக் கணைதான் வேப்பிலையோ பஞ்சுமெத்தை
வேப்பம்பாலுண்டவளே வேதாந்த மாரிமுத்தே
ஐந்நூறு பாம்புனக்கு அள்ளியிட்ட வீரசடை
வீரசடைமேலிருந்து விமலியரே கொஞ்சுமம்மா
முந்நூறுசந்தி முதற்சந்தி யுன்னுதென்றாய்
நானூறு சந்தி நடுச்சந்தியுன்னுதென்றாய்
சந்திக்குச்சந்தி தனிச்சந்தியுன்னுதென்றாய்
வீதிக்கு வீதி வெளிச்சந்தியுன்னுதென்றாய்
பட்டத்தழகியம்மா படைமுகத்துராஜகன்னி
கன்னபுரத்தாளே காரணசவுந்தரியே
திருவிளக்குநாயகியே தேவிகன்னனூராளே
மணிவிளக்கின்மேலிருந்து மாதாவே கொஞ்சுமம்மா
விளக்கிற் குடியிருந்து மெல்லியரே கொஞ்சுமம்மா
கொஞ்சுமம்மா பெற்றவளே கோபாலன் தங்கையரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்தார் முகத்தையம்மா செல்லரிக்கக்கண்டிடுவாய்
பரிகாசஞ் செய்தவரைப் பல்லைப்பிடுங்கி வைப்பாய்
மூலைவீட்டுப் பெண்களைத்தான் முற்றத்திலாட்டிடுவாய்
அரண்மனைப் பெண்களைத்தா னம்பலத்திலாட்டிடுவாய்
பொல்லாத பெண்களைத்தான் பொற்பாதங் கட்டிடுவாய்
தோற்பாதங்கட்டிடுவாய் துரந்தரியே மாதாவே
நடுவீதியிற் கொள்ளிவைத்து நானறியேனென்றிடுவாய்
கடைவீதியிற் கொள்ளிவைத்து கடக்கபோய் நின்றிடுவாய்
கடியாவிஷம் போலே கடிக்கவிட்டுப் பார்த்திருப்பாய்
தீண்டாவிஷம் போலே தீண்டவிட்டுப் பார்த்திருப்பாய்
பாம்புகன்னி நீலியம்மா பழிகாரி மாரிமுத்தே
பழிகாரி மாரிமுத்தே பாவம் வந்து சேருமம்மா
தாயே துரந்தரியே சர்வலோகமாதாவே
ஆறாத கோபமெல்லாம் ஆச்சியரே விட்டுவிடு
கடலில் மூழ்கியம்மா கடுகநீ வாருமம்மா
காவேரியில் தான் மூழ்கியம்மா காமாட்சி வாருமிங்கே
வந்தமனை வாழுமம்மா இருந்தமனையீடேறும்
கஞ்சாவெறியன் கனவெறியன் பாவாடை
பாவாடைராயனைத்தான் பத்தினியே தானழையும்
தாயாரும் பிள்ளையுமாய் தற்காக்க வேணுமம்மா
மாதாவும் பிள்ளையுமாய் மனதுவைத்துக் காருமம்மா
ஆத்தாளும் பிள்ளையுமாய் அன்புவைத்துக் காருமம்மா
காரடிபெற்றவளே காலுதலை நோகாமல்
காசிவள நாட்டைவிட்டு காரணியே வந்தமரும்
ஊசிவள நாட்டைவிட்டு உத்தமியே வந்தமரும்
பம்பைமுழங்கிவர பரமேளமார்ப்பரிக்க
சிற்றுடுக்கை கொஞ்சிவர சிறுமணிகளோலமிட
வேடிக்கைப் பார்த்திருந்தாள் வேப்பஞ்சிலையாளும்
கேளிக்கைப் பார்த்திருந்தாள் கிளிமொழியாள் மாரிமுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயபுரத்தாளே சாம்பிராணி வாசகியே
சமயபுரத்தெல்லைவிட்டு தாயாரே வாருமம்மா
முக்கோணத்துள்ளிருக்கும் முதன்மையாய் நின்ற சக்தி
நாற்கோணத்துள்ளிருக்கும் நல்லமுத்துமாரியே
பாஞ்சாக்ஷரப் பொருளே பார்வதியே பெற்றவளே
அறுகோணத்துள்ளிருக்கும் ஆதிபரமேஸ்வரியே
அஷ்டாக்ஷரப் பொருளே ஆனந்தமாரிமுத்தே
நாயகியே மாரிமுத்தே நாரணனார் தங்கையரே
ஐம்பத்தோரட்சகியே ஆதிசிவன் தேவியரே
ஆதிசிவன் தேவியரே அம்மைமுத்துமாரியரே
பேருலகரக்ஷகியே பெருமாளுடன் பிறப்பே
பெருமாளுடன் பிறந்து பேருலகையாண்டவளே
ஆயனுடன் பிறந்து அம்மைமுத்தாய் நின்றவளே
திருக்கோணத்துள்ளிருக்கும் திரிபுரசவுந்தரியே
ஆறாதாரப் பொருளே அபிஷேகப் பத்தினியே
மூலாதாரப் பொருளே முன்பிறந்த தேவதையே
தாயே துரந்தரியே சர்வலோகேஸ்வரியே
பத்திரியால்தான் தடவிபாரமுத்தைத்தானிறக்கும்
வேப்பிலையால் தான்தடவி மெல்லியரே முத்திறக்கும்
மேனியெல்லாம் தான்குளிர விளையாடி முத்திறக்கும்
இறக்கிறக்குந் தாயாரே எங்களைக் காப்பாற்றுமம்மா
முத்திலுமுத்து முகத்திலிடுமாரிமுத்து
எங்கும் நிறைந்த முத்து எல்லார்க்குமாரிமுத்தே
பெண்ணாய்ப் பிறந்து பேருலகையாளவந்தாய்
பேருலகையாளவந்தாய் பெண்ணரசி மாரிமுத்தே
நித்தம்பராமரிக்க நிஷ்டூரி நீ பிறந்தாய்
தேசம் பராமரிக்க தெய்வ கன்னி நீ பிறந்தாய்
கிளியேந்தும் நாயகியே கிளிமொழியே தாயாரே
நித்திய கல்யாணி நீலிபரஞ்சோதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மணி பார்வதியே ஆணிமுத்து தாயாரே
லோகமெல்லாம் முத்தளக்கும் லோக பரமேஸ்வரியே
வெற்றிக்கொடி பறக்க விருதுபம்பை தான் முழங்க
எக்காளமூதிவர எங்குங்கிடுகிடென்ன
பஞ்சவர்ணடால்விருது பக்கமெல்லாம் சூழ்ந்துவர
நாதசுரமேளம் நாட்டியங்களாடிவர
தப்பட்டை மேளம் தவுல்முரசு தான் முழங்க
தாளங்கள் தானடிக்க கவிவாணரெச்சரிக்க
சின்னங்களூதிவர சிறப்பாய் கொடைபிடிக்க
கொடிகள் சிலர்பிடிக்க கொக்கரிப்பார் வீரமக்கள்
ஜண்டாசிலர் பிடிக்க கொக்கரிப்பார் வீரமக்கள்
சாமரைகள் தான்வீசி சந்திப்பார் வீரமக்கள்
தாரைபூரிசின்னம் ஆரவாரமாய் முழங்க
தக்கயுடுக்கைகளும் தவுலோடுபம்பைகளும்
மிக்ககவுண்டைகளும் மிருதங்கந்தான் முழங்க
நன்மகுடியுஞ்சுதியும் நன்றாகவூதிவர
தம்புருவீணை தக்கபடிதான் வாசிக்க
பம்மையடித்துப் பரமேளந்தானதிர
கெண்செட்டுவாத்தியமும் கிளார்நெட்டு வாத்தியமும்
கொடிவாத்தியமும் புதிதாய் கொண்டுவந்தாருன்மக்கள்
இத்தனை வாத்தியங்கள் இசைக்கின்றார் பாருமம்மா
பார்த்துக்குளிருமம்மா பாங்கானவுன்மனது
கண்டுகுளிருமம்மா கல்லானவுன்மனது
எப்படியாகிலுந்தா னேழைகளுமீடேற
கண்பாரும்பாருமம்மா காரணசவுந்தரியே
இந்திரனுக்கொப்பா யிலங்குமகமாரியரே
கும்பத்தழகியம்மா கொலுமுகத்துராஜகன்னி
சகலகுற்றம் சகலபிழை தாயாரே நீ பொறுப்பாய்
வணங்குகின்ற மக்களுக்கு வாழ்வுமிக வளிப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்காரரூபியென்று உன்னைய தோத்தரிக்க
படவேட்டில் வீற்றிருக்கும் பரஞ்சோதி தாயாரே
ஆரறிவாருன்மகிமை ஆணிமுத்து தாயாரே
அண்டபுவனமெல்லாம் அம்மாவுனைத் தொழுவார்
தேசங்களெங்கும் தேவியைத் தோத்தரிப்பார்
எள்ளுக்குளெண்ணெய்போ லெங்கும் நிறைந்த சக்தி
எங்கும் நிறைந்தவளே எல்லார்க்குந் தாயாரே
அஞ்சலென்ற வஸ்தமொடு அடியார்தமைக் காக்க
வேப்பிலையுங்கையில் விபூதியெங்குந்தூளிதமும்
சரணாவிந்தமதைத் தந்தருளும் மாரிமுத்தே
உன்பேர் நினைத்தவர்க்கு உற்றதுணை நீயிருமம்மா
பில்லிபிசாசுகளும் பறந்தோடி போகுமம்மா
சூனியமும் வைப்பும் சுழன்றலைந் தோடிவிடும்
பாதாள வஞ்சனமும் பறந்துவிடு முன்பேர் நினைத்தால்
சத்தகன்னிமாதாவே சங்கரியே மனோன்மணியே
கரகத்தில் வீற்றிருக்கும் கன்னனூர் மாரிமுத்தே
சூலங்கபாலமுடன் துய்யடமரகமும்
ஓங்காரரூபமம்மா மானிடர்கள் யாவருந்தான்
அடியார்தமைக்காக்கும் ஆதிபரமேஸ்வரியே
அடியார்கள் செய்த பிழை ஆச்சியரே நீ பொறுப்பாய்
கோயிலடிமையம்மா கொண்டாடும் பாலகன்றான்
சன்னதிபிள்ளையைத்தான் தற்காரும் பெற்றவளே
உன்னையல்லால் வேறுதுணை ஒருவரையுங்காணேனம்மா
வருந்துவார்பங்கில் வளமாய் குடியிருப்பாய்
பாவாடைக்காரியம்மா பராபரியே அங்குகண்ணே
உண்ணுகின்ற தேவதைக ளுடுத்துகின்ற தேவதைகள்
கட்டுப்பட்ட தேவதைகள் காக்கின்ற தேவதைகள்
இந்தமனையிடத்தி லிருந்துண்ணும் தேவதைகள்
சாம்பிராணிதூபத்திற் குட்பட்ட தேவதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவோரும் வந்திருந்து அடியாரைக் காக்க வேணும்
ஓராம்படித்தளமாம் ஓலைப் பூமண்டபமாம்
ஓலைப்பூமண்டபத்தில் உகந்துகொலுவிருந்தாள்
இரண்டாம்படித்தளமாம் இரத்தினசிம்மாதனமாம்
இரத்தினசிம்மாதனத்தி லிருந்தரசுதான்புரிவாள்
மூன்றாம்படித்தளமாய் முனைமுகப்பூச்சாலைகளாம்
முனைமுகப்பூச்சாலைகளில் முந்திக் கொலுவிருந்தாள்
நான்காம்படித்தளமாம் நவரத்ன மண்டபமாம்
நவரத்தினமண்டபத்தில் நாயகியும் வந்தமர்ந்தாள்
ஐந்தாம் படித்தளமாம் அழுந்தியசிம்மாதனமாம்
அழுந்தியசிம்மாதனத்தில் ஆயிகொலுவிருந்தாள்
ஆறாம்படித்தளமாம் அலங்காரச் சாவடியாம்
அலங்காரச்சாவடியில் ஆச்சியரும் வந்திருந்தாள்
ஏழாம்படித்தளமாம் எழுதிய சிம்மாதனமாம்
எழுதிய சிம்மாதனத்தி லீஸ்வரியாள் கொலுவிருந்தாள்
எட்டாம்படித்தளமாம் விஸ்தார மேடைகளாம்
விஸ்தார மேடைகளில் விமலியரும் வந்தமர்ந்தாள்
ஒன்பதாம் படித்தளமாம் பளிங்குமாமண்டபமாம்
ஒருமுகமாய் நின்றசக்தி உத்தமியுங் கொலுவிருந்தாள்
பத்தாம்படித்தளமாம் பளிங்குமாமண்டபமாம்
பளிங்குமாமண்டபத்தில் பத்தினியாள் கொலுவிருந்தாள்
ஆத்தாள்கொலுவிலேதான் ஆறுமுகன் கொலுவிருநதார
ஐங்கரனும் வல்லபையும் அன்பாய்க் கொலுவிருந்தார்
தொந்தி வயிற்றோனும் துந்தியுங்கொலுவிருந்தார்
குழந்தைவடிவேலன் குமரேசர் தானிருந்தார்
தோகைமயிலேறும் சுப்பிரமணியர் கொலுவிருந்தார்
சிங்கவாகனமேறும் தேவிகொலுவிருந்தாள்
ஊர்க்காக்குங்காளி உத்தமியாள் கொலுவிருந்தாள்
துர்க்கையொடுகாளி தொடர்ந்து கொலுவிருந்தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளிதெய்வானையுடன் மகிழ்ந்துகொலுவிருந்தாள்
பச்சைமலை நாயகியாள் பைங்கிளியாள் தானிருந்தாள்
பூவைகுறத்தியரும் பொருந்திக் கொலுவிருந்தாள்
வாள்முனியும் செம்முனியும் வந்துகொலுவிருந்தார்
காத்தன்கருப்பனோடு கட்டழகர்வீற்றிருந்தார்
தொட்டியத்துச் சின்னானும் துரைமகனுந்தாமிருந்தார்
மருமக்களெல்லோரும் மகிழ்ந்து கொலுவிருந்தார்
குமாரர்களெல்லோரும் சுவடிக்கொலுவிருந்தார்
ஆரியமாலையுடனனைவோரும் கொலுவிருந்தார்
ஆயன்பெருமாளனந்த சயனனென்னும்
மாயன்பெருமாள் மங்கைமணவாளன்
ஐவரைக் காத்த ஆதிநெடுமாலும்
பஞ்சவரைக்காத்த பாரளந் தோன்தாமிருந்தார்
கொற்றவரைக்காத்த கோபாலர் தாமிருந்தார்
முட்டையிற்குஞ்சு முகமறியாபாலகரை
பிட்டுவளர்த்தெடுத்த பெருமாள் கொலுவிருந்தார்
செட்டையிற்காத்த ஜெயராமர் சீதையரும்
அலுமேலு மங்கையம்மா ளரிரர்மர் சீதையரும்
மங்கையொடுலட்சுமியும் மகிழ்ந்து கொலுவிருந்தார்
சீதேவிமூதேவி சேர்ந்து கொலுவிருந்தார்
பாஞ்சாலனெக்கியத்தில் புதுமைபோல் வந்துதித்த
பத்தினியாள் துரோபதையும் பாரக்கொலுவிருந்தார்
தனராதனஞ்செயரும் தர்மர்கொலுவிருந்தார்
வாயுதேவன் புத்திரனார் மதவீமன் தாமிருந்தார்
தேவேந்திரன் புத்திரனார் தேர்விஜயன் தாமிருந்தார்
நகுலசகாதேவர் நலமாய்க் கொலுவிருந்தார்
நாணக்குயிலழகர் கட்டழர் வீற்றிருந்தார்
ஐவர்களுங்சுவடி அன்பாய்க் கொலுவிருந்தார்
பட்டரத்தரசி பைங்கிளி சுபத்திரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயன்சகோதரியா ளாரணங்கு வீற்றிருந்தாள்
நல்லதங்காள் வீரதங்காள் நல்லசங்கோதியம்மாள்
அந்தமுள்ளசுந்தரியா ளாரணங்குவீற்றிருந்தாள்
மலையனூர்தானமர்ந்த மாரிக்கொலுவிருந்தாள்
கைச்சூலக்கப்பறையுங் கையிற்கபாலமுடன்
பச்செலும்புதின்றால் பாலொழுகுமென்று சொல்ல
சுட்டெலும்புதின்றவளே சுடலைவனங்காத்தவளே
அக்காளுந்தங்கையரும் ஐந்திரண்டேழுபேரும்
ஐந்திரண்டேழுபேரும் அங்கே கொலுவிருந்தார்
தங்காது பேய்பில்லி தன்பேரைச் சொன்னவுடன்
அங்காள ஈஸ்வரியும் அமர்ந்து கொலுவிருந்தார்
தொல்லைவினை நீங்கிச் சுகுணமதையளிக்கும்
எல்லைப்பிடாரியரும் இங்கே கொலுவிருந்தார்
காவலர்கள் தான் புகழச் கனகசிம்மாதனத்தில்
காவலதிகாரி கட்டழகி வீற்றிருந்தார்
இந்தமனைமுதலா யேழுமனையுங்காவல்
சந்ததமுன்காவல் சாதுகுணமாரியரே
காவல்பதனம்மா கட்டழகி மாரிமுத்தே
காவலுக்குள்ளே களவுவரப்போகுதம்மா
பாரசவுக்கிட்டுப் பத்திரமாய்க்காருமம்மா
தீராவினைகளைத்தான் தீர்க்கும் பராபரியே
தாழும்பதிகளைத்தான் தற்காத்துரட்சியம்மா
ஏழு பிடாரியும் இசைந்துகொலுவிருந்தார்
முத்தாலுராவுத்தன் முனையுள்ள சேவகரும்
முற்றத்தில் வந்து முனைந்து கொலுவிருந்தார்
பூவாடைகங்கையென்று பூரித்துக் காத்திருக்கும்
பாவாடைராயனும் பக்கங்கொலுவிருந்தார்
தாட்சியில்லாதசிவ சங்கரியாளென்று சொல்லும்
ஆட்சியுடன் கொலுவில்அமர்ந்து கொலுவிருந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவிதிருக்கொலுவில் சேர்ந்து கொலுவிருந்தார்
ஆயித் திருக்கொலுவில் அமர்ந்தாரனைவோரும்
மாரித்திருக்கொலுவல் மனமகிழ்ச்சியாயிருந்தார்
வீரியக் கொலுவில் வீற்றிருந்தாரெல்லோரும்
ஆலித்துதானிருந்தார் அம்மைத் திருக்கொலுவில்
பாலித்துதானிருந்தார் பராபரியாள் தன்கொலுவில்
சுவடிக்கொலுவிருந்தார் கொம்பனையாள் தன்கொலுவில்
நாடிக் கொலுவிருந்தார் நாரணியாள் தன்கொலுவில்
சந்தேகம் போக்கிச் சாயுச்சியமடைய
சந்தோஷமாகத் தாமிருந்தாரெல்லோரும்
நாடுதழைக்கவம்மா நல்லோர்மிகவாழி
மாடுதழைக்கவம்மா மானிலத்தோர் தான்வாழி
பாரிலுள்ள ஆடவரும் பாலகரும் மங்கையரும்
ஆரியரும் மற்றோரும் யாவர்களுந் தான்படிக்க
முன்னாளில் மூத்தோர் மொழிந்ததாலாட்டை
இன்னாளிற் போற்றி எழுதாவெழுத்ததினால்
அச்சுக்கூடத்ததிபர் அநேகரிதுவரையில்
உச்சிதமாய்ச் சிலிதை யோங்கிப்பதிப்பித்தார்
கற்றோருமற்றோரும் களிப்பாய் படிப்பதற்கு
சொற்குற்றமில்லாமல் சுத்தப்பிரதியதாய்
பாரிலுள்ளோரிக் கதையைப் படித்துத் தொழுதேற்ற
கற்றவரும் மற்றவரும் களிப்படைய தான்வாழி
சங்கரனும் சங்கரியும் அறுமுகனுந்தான் வாழி
செங்கன்மால் ஸ்ரீராமர் சீதையருந்தான் வாழி
பஞ்சவர்களனைவரும் பைங்கிளியாள் துரோபதையும்
அல்லிசுபத்திரையும் அனைவோருந்தான் வாழி
முப்பத்துமுக்கோடி தேவர்களும் வாழி
சொற்பெரியசோம சூரியாக்கினிவாழி
நாற்பத்தெண்ணாயிரந் நல்முனிவர்தான் வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்குங் கருடசித்தர் வித்தியாதரர் வாழி
சந்திரனுஞ் சூரியனுந் தானவர்கள் தான் வாழி
இந்திரனும் தேவர்களும் எல்லோருந்தான் வாழி
கற்பகக்காவும் காமதேனும் வாழி
பற்பலதீவும் பஞ்சாக்ஷரம் வாழி
காத்தனொடுவீரன் கருப்பன் மிகவாழி
சங்கிலிக்கருப்பன் சப்பாணிதான் வாழி
மாடனிருளன் வடுகனுந்தான்வாழி
பாவாடைராயன் பலதேவரும் வாழி
இக்கதைகேட்டோர் என்னாளுந்தான் வாழி
பெருமையுடன் கேட்கும் பெரியோர் வாழி
ஊரெங்கும் கீர்த்திபெற்ற உத்தமருந்தான் வாழி
பாருலகிலிக்கதையைப் படித்தோர்மிக வாழி
நாயகியாள் தன்கதையை நாள்தோறும் வாசிப்போர்
பாரினில் புத்திரபாக்கியம் படைத்துமிக வாழ்வாரே
மாரித்திருக்கதையை மகிழ்ந்துமே கேட்டோரும்
தேவித்திருக்கதையைத் தீர்க்கமாய்க் கேட்டோரும்
பாடிபடித்தோரும் பாக்கியத்தைத் தான் பெறுவார்
நாடித்துதிப்போரும் நற்கதியைத் தானடைவார்
ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேறோடி
மூங்கில் போல் சுற்றமும் முசியாமல் வாழ்ந்திருப்பார்
மங்களம் மங்களம் மாரியம்மன் தன்கதைக்கும்
எங்கும் நிறைந்த ஈஸ்வரிக்கு மங்களமாம்.

மாரியம்மன் தாலாட்டு முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள் மேம்பட.......

**குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்கவும், இதோ சில எளிய வழிகள்:**

1. நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை (Ego) விடுங்கள்
2. அர்த்தமில்லாமலும், தேவை இல்லாமலும், பின் விளைவு அறியாமலும், பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள். (Loose Talks)
3. எந்த விஷயத்தையும், பிரச்சனையையும் நாசூக்காக கையாளுங்கள். (Diplomacy)
4. விட்டுக் கொடுங்கள் (Compromise)
5. சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்து தான் ஆக வேண்டும் என்று உணருங்கள் (Tolerance)
6. நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று கடைசி வரை வாதாடாதீர்கள். (Adamant Arguement)
7. குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள் (Narrow Mindedness)
8. உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல், இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும், அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள். (Carrying Tales)
9. மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள். (Superiority Complex)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. அளவுக்கதிகமாய், தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள். (Over Expectation)

11. எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர் கள்.

12. கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள்.

13. அற்ப விஷயங்களை பெரிதுபடுத்தாதீர்கள்.

14. உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள். (Flexibility)

15. மற்றவர் கருத்துக்களை செயல்களை நடக்கின்ற நிகழ்ச்சி களைத் தவறாகப்புரிந்து கொள்ளாதீர்கள். (Misunderstanding)

16. மற்றவர்களுக்கு உரிய மரியாதையைக் காட்டவும், இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள். (Courtesy)

17. புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களைச் சொல்ல வும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.

18. பேச்சிலும், நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதை தவிர்த்து அடக்கத் தையும் பண்பையும் காட்டுங்கள்.

19. அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்.

20. பிரச்சனைகள் ஏற்படும் போது அடுத்தவர்கள் முதலில் இறங்கி வரவேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவக்க முன் வாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்



எங்கள் குடும்பத்தின் ஒளியாய் இருந்து அன்பு
செய்து எமக்கெலாம் வழிகாட்டிய எங்கள் அன்புத்
தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு உடன்வந்து
ஆறுதல் கூறியோருக்கும், பல வழிகளிலும்
உதவியோருக்கும், தொலைபேசி, அனுதாபமடல்
வெளியிட்ட திரு.திருமதி கணேசமூர்த்தி புஸ்பா
விற்கும் எங்களின் துயரில் பங்கெடுத்தோருக்கும்
எமது தெய்வத்தின் இறுதி யாத்திரை வரை கலந்து
கொண்ட நண்பர்கள், அயலவர்கள், உறவினர்கள்
அனைவருக்கும், இந்நினைவஞ்சலி மலரை ஆக்கிய
கந்தையா சுந்தரலிங்கத்திற்கும், இதனை அச்சிட்ட
ஜெயஸ்ரீ அச்சகத்திற்கும், இன்றைய வீட்டுக்
கிருத்தியத்திலும், மதியபோசனத்திலும் கலந்து
கொண்ட அனைவருக்கும் எங்கள்
உள்ளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

மயிலு வளவு,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.



இங்ஙனம்
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதை வழியில் கிலேசம் நீங்குக

"எதிலும் ஒட்டாமல் ஆகாயம் தனித்து விரிவது போல், ஆத்மாவும் தேகத்தில் ஒட்டாமல் தனி ஒரு இயற்கை போல் இயங்குவான். இந்த ஆத்மா என்பவன் நிலையானவன். அழிவில்லாதவன். கணக்கிட முடியாதவன். ஆயினும் அவனுடைய ஸ்தூல வடிவங்கள் முடிவடையக் கூடியவை".

"ஆத்மா கொல்வதும் இல்லை. கொல்லப்படுவதும் இல்லை. இவன் பிறப்பதுமில்லை. எக்காலத்திலும் இறப்பதுமில்லை. இவன் பிறப்பில்லாதவன். எல்லை இல்லாதவன். நிரந்தரமானவன், உடம்பு கொல்லப்படுவதால் இவன் கொல்லப்பட்டான்"

"கிழிந்த துணிகளை களைந்து எறிந்து விட்டு மனிதன் புதிய துணிகளை அணிந்து கொள்வது போல், ஆத்மா சிதைந்து போன உடம்புகளைக் களைந்து விட்டு புதிய உடம்மைப் பெற்றுக் கொள் கின்றான்".

ஆயுதங்கள் இவனை அரித்தெடுக்க முடியா. நெருப்பு இவனை நீராக்க இயலாது. தண்ணீர் இவனது தலையையும் நனைக்காது. காற்று இவனை உலர்த்தவும் முடியாது".

இவன் முடிவு காண முடியாதவன் சிந்தனைக்கு அப்பாற் பட்டவன். மாறுதலே இல்லாதவன். இப்படி இவனை அறித்துகொள். அறிந்து கொண்டு துன்பத்தை கைவிடு".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாக நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையாதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

—பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயஸ்ரீ பிறிண்டேர்ஸ், நீராவியடி, யாழ்ப்பாணம்.